**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR**

**O.S. No.248/2001**

Deposition of D**.W.-4** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. A.Tamilselvi, Gr. III Bench clerk of this court, on 04.08.2025 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : சாந்தி Husband Name : கண்ணன்

துவக்க நேரம்: 12.10 P.M

வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:

1. எனக்கு திருமணமாகி எத்தனை ஆண்டுகளாகிறது என்றால் சுமார் 35 ஆண்டுகளுக்கு முன்பு திருமணமானது. எங்கள் ஊருக்கு தனியாக மயானம் உள்ளதா என்றால் இல்லை. எங்கள் ஊரில் பொதுவாக இறந்தவர்களை எங்கு அடக்கம் செய்வார்கள் என்றால் அவரவர்களது நிலத்திலேயே அடக்கம் செய்து கொள்வோம். இதுநாள்வரை அவ்வாறுதான் உள்ளதா என்றால் ஆமாம். நான் சொல்வது தவறு என்றாலும், ராமநாயக்கன்பாளையத்திற்கு தனியாக மயானம் உள்ளது என்றாலும், நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

2. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும், நான்தான் சொன்னேன். நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் தாவா சொத்திற்கு அருகில்தான் நீண்ட காலமாக குடியிருந்து வருகிறேன் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்திலிருந்து நான் குடியிருக்கும் இடத்திற்கும் இடையே எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 1 கி.மீ

தூரம் இருக்கும்.

3. நான் என் குடும்பத்தாருடன் தாவா சொத்து உள்ள 10 ஏக்கர் காலனி பகுதியில் நீண்ட காலமாக குடியிருந்து வருகிறேன் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் சொல்வது தவறு என்றாலும், பிரதிவாதிகளுக்கு ஆதரவாக வேண்டுமென்றே உண்மையை மறைத்து முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

4. நான் குறிப்பிட்டுள்ள R.P.ராமசாமி, கோவிந்தசாமி மற்றும் என் கணவர் உட்பட அனைவரும் கம்யூனிஸ்ட் கட்சியில் நீண்ட காலமாக இருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். R.P.ராமசாமி, கோவிந்தசாமி மற்றும் என் கணவர் உட்பட அனைவர் மீதும் குற்றவியல் வழக்கு நடைபெற்றது என்றால் எனக்கு தெரியவில்லை (வாதி தரப்பு வழக்கறிஞர் சாட்சி சரியென்று கூறிவிட்டு பின்னர் மாற்றிக் கூறுவதாக ஆட்சேபனை செய்கிறார்).

5. நான் சொல்வதுபோல் சின்னப்பன் என்பவர் தாவா சொத்தின் உரிமையாளர் இல்லை என்றாலும், நான் பிரதிவாதிகளுக்கு ஆதரவாக பொய்யாக கூறுகிறேன் என்றாலும் சரியல்ல. பிரதிவாதிகள் தாவா சொத்தில் தொடர்ந்து இருந்து வருவதாக நான் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் வாதிகள்தான் அனுபவத்தில் இருந்து வருகிறார்கள் என்றாலும், பிரதிவாதிகள், வாதிகளை தொந்தரவு செய்து வருகிறார்கள் என்றாலும் சரியல்ல.

6. தாவா சொத்தில் பிரதிவாதிகளும், அவர்களது அடியாட்களும், எனது கணவரும் குற்ற செயல்களில் ஈடுபட்டு வருகிறார்கள் என்பதால்தான் அவர்கள் அவசிய தரப்பினர்களாக வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல (பிரதிவாதிகள் குற்ற செயல்களில் ஈடுபட்டுள்ளார்கள் என்பதை பதிவு செய்யக்கூடாது என

பிரதிவாதிகள் தரப்பில் ஆட்சேபனை செய்யப்பட்டது).

வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

முடிவு நேரம்: 12.35 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him / to be correct

sd/D.Jansi Rani
Additional District Munsif, Attur

Typed by Tmt. L. Kalaiselvi - O.S. No.248/2001, Dt.05.08.2025.